*19*

# சீஷத்துவத்திற்கு அழைப்பு

## [9:9–17]

*இந்த இடத்தில் (சுவிசேஷ) விபரம், சீஷத்துவத்தின் ஆய்வுக்கருத்திற்குத் திரும்புகிறது (8:18-22; 9:9-17). இந்தப் பகுதிகள், இயேசுவினால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களின் தொகுப்புகளைத் தொடர்புபடுத்தும் பிரிவுக்கருவிகளாகப் பயன்படுகின்றன (8:1-17; 8:23-9:8; 9:18-34). சீஷத்துவத்தின் மீதான இந்த இரண்டாவது பகுதி, மத்தேயுவுக்கு இயேசுவின் அழைப்பு (9:9), பாவிகளுக்கு அவரது அழைப்பு (9:10-13) மற்றும் அவரது சீஷர்களின் மத்தியில் உபவாசத்திற்கான இடம் (9:14-17) ஆகியவற்றை உள்ளடக்குகிறது.*

### மத்தேயுவை அழைத்தல் (9:9)

**9இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு: எனக்குப் "பின்செல்லுவா!" என்றார்; அவன் எழுந்து, அவருக்குப் பின்சென்றான்.**

**வசனம் 9.** இயேசு, தமது போதனை மற்றும் அற்புதங்களோடு கூட, தம்முடன் பயணம் செய்யவும், தம்மிடத்தில் இருந்து கற்றுக்கொள்ளவும், நிறைவாகத் தம்மைப் பற்றிய நற்செய்தியைப் பிரசங்கிக்கவும், தமது சீஷர்களைக் கூட்டும் பணியையும் செய்தார். முந்தின அதிகாரத்தில் இயேசு, தம்மைப் பின்பற்றும்படி வந்த ஒரு வேதபாரகரை, ஊக்கமிழக்கச் செய்ததாகக் காணப்பட்டிருக்க (8:19, 20), இவ்வேளையில் அவர், வரிவசூலிப்பவர் ஒருவரை செயல்துடிப்புடன் இணங்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

**மத்தேயு** என்பவரை அழைத்த நிகழ்வு, ஒப்பீட்டு சுவிசேஷங்கள் மூன்றிலும் காணப்படுகிறது. இந்த சுவிசேஷ விபரத்தை எழுதியவர் "மத்தேயு" (9:9) மற்றும் "ஆயக்காரனாகிய மத்தேயு" (10:3) என்று தம்மைப் பற்றி குறிப்பிட்டார். இவருக்கு விடுக்கப்பட்ட அழைப்பைப் பற்றிக் குறிப்பிட்ட மாற்குவும் லூக்காவும், "லேவி" என்று மாற்றுப் பெயரைப் பயன்படுத்தினர் (மாற்கு 2:14; லூக்கா 5:27), ஆனால் பன்னிருவரைப் பட்டியலிடுகையில் இவரை "மத்தேயு" என்றே குறிப்பிட்டனர் (மாற்கு 3:18; லூக்கா 6:15; நடபடிகள் 1:13).

மத்தேயு, தமது தொழில் நிமித்தமாக, "எல்லா மனிதர்களாலும் வெறுக்கப்பட்டவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.[1] வரி வசூலித்தவர்கள் பொதுவாக, மக்களின் "மிகவும் வெறுக்கத் தக்கவர்கள்" என்ற பட்டியலில் முன்னிலை வகித்தனர். அவர்கள் ரோம ஆட்சியாளர்களின் முகவர்களாக இருந்ததால், தங்கள் சொந்த மக்களையே காட்டிக்கொடுத்தவர்கள் என்று கருதப்பட்டனர். மேலும் அவர்கள் மக்களிடம் அளவுமீறி வரிவசூலித்ததால்,

திருடர்களாகவும் கருதப்பட்டனர். குறிப்பிட்ட பகுதியின் வரிவசூல் தொகையானது உயர்ந்த தொகைக்கு ஏலம் எடுத்தவரைக் ("ஆயக்காரருக்குத் தலைவன்"; லூக்கா 19:2) கொண்டு வடிவமைக்கப் பட்டதாலும், அவருக்குக் கீழே வரிவசூலித்தவர்கள் வேலை செய்ததாலும், ஊழல் செய்வதற்கான விருப்பம் ஒன்று இருந்தது (5:46ன் மீதான விளக்கங்களைக் காணவும்). தாமஸ் E. ஸ்கிமிட் அவர்கள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> தரகு அமைப்பு முறைப்படுத்தப் பட்டிருந்தாலும், சில பொருள்களின் மதிப்பைத் தீர்மானிக்க, வரிவசூலித்தவர் கொண்டிருந்த அதிகாரம், நேர்மையற்ற தன்மையை ஊக்குவித்தது. வரிவசூலித்தவர்களுக்கு யோவான் ஸ்நானனின் அறிவுறுத்துதல்களும் (லூக்கா 3:12-13) சகேயு திரும்பச் செலுத்துவதாகக் கொடுத்த உறுதிமொழியின் விபரமும் (லூக்கா 19:8), மோசடி செய்யும் இந்த மனவிருப்பத்திற்குச் சீர்பொருத்தமானவையாக உள்ளது.[2]

ஊழலின் விளைவாக, வரிவசூலித்தவர்களில் சிலர் மிகவும் செல்வந்தர்கள் ஆயினர் என்பது உறுதி (லூக்கா 19:2).

இந்தக் காரணங்களினால், வரிவசூத்தவர்கள் "பாவிகளுடன்" வகைப்படுத்தப்பட்டனர். வரிவசூல் செய்பவர்கள் தீட்டானவர்கள் மற்றும் அவர்கள் தொடும் எதன்மீதும் அவர்கள் தங்கள் தீட்டைப் பரப்புகின்றனர் என்று ரபீத்துவப் பாரம்பரியம் கூறிற்று.[3] நேர்மையற்ற வழிகளில் அவர்கள் சம்பாதித்த பணம், ஜெப ஆலயத்திலோ அல்லது தேவாலயத்திலோ வரவேற்கப்படவில்லை.[4] மற்றும் அவர்கள் தீர்ப்பிடவோ அல்லது நீதிமன்றத்தில் சாட்சி கூறவோ அனுமதிக்கப்படவில்லை.[5] இந்தத் தரக்கணிப்புகள் இருந்தபோதிலும், வரிவசூலிப்பவர்களில் சிலர் ஆவிக்குரிய விஷயங்களில் ஆர்வமாக இருந்ததாகக் காணப்பட்டனர் (லூக்கா 19:1-10; காண்க 18:9-14). கர்த்தருடைய முதல் சீஷர்களில் ஒருவரான மத்தேயு, பழித்துரைக்கப்பட்ட இந்தக் குழுவில் இருந்து வந்தவராக இருந்தார்.

**இயேசு** நடந்து செல்லுகையில், **ஆயத்துறையில்** (*telōnion*) உட்கார்ந்திருந்த மத்தேயு என்பவரைச் சந்தித்தார். இது "வரிவசூலிக்கும் இல்லமாக" அல்லது "ஆயத்துறையாக" இருந்தது. R. T. ஃபிரான்ஸ் அவர்களின் கூற்றுப்படி, "கப்பர்நகூமில் இருந்த *வரிவசூல் அலுவலகம்,* அந்திப்பாவின் எல்லைப் பகுதியை தெக்கப்போலி ஏரியின் குறுக்காகவோ அல்லது பிலிப்புவின் காற்பங்குப் பகுதியை யோர்தானின் குறுக்காகவோ கடந்து எடுத்துச் செல்லப்பட்ட பொருள்களின் மீது விதிக்கப்பட்ட வரிகள்பற்றி அக்கறை உடையதாக இருந்திருக்கும்."[6] மத்தேயு போன்ற அலுவலர்கள், பயணிகளின் வர்த்தகப் பொருள்களைச் சுலபமாகக் கண்டறியக்கூடும்படிக்கு, வரிவசூல் நிலையங்கள், பயணத்திற்கு அதிகமாகப் பயன்பட்ட சாலைகளில் அமைந்திருந்தன.[7] மத்தேயு, வரிவசூல் அலுவலகத்தின் அலுவலர்களில் ஒருவராக இருந்ததால், வர்த்தகர்களின் பயணத்தை நிறுத்தவும் அவர்களின் பயணமூட்டை ஒவ்வொன்றையும் திறந்து பார்க்கவும் அவர் அதிகாரம் கொண்டிருந்தார்.

மத்தேயுவிடம் இயேசு, **எனக்குப் பின்சென்றுவா** என்று மாத்திரமே கூறினார். அவர் சற்றுக் காலத்திற்கு முன்னர் இயேசுவைப் பற்றிக்

கேள்விப்பட்டிருந்தார் என்பது உறுதி, மற்றும் ஒருவேளை அவரது அற்புதங்களையும் போதித்தலையும் கண்டிருக்கலாம். அவருக்கு முன்னதாக, பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் செய்திருந்தது போன்றே (4:18-22), மத்தேயு **எழுந்து, அவருக்குப் பின்சென்றான்**. லூக்கா, "அவன் எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, அவருக்குப் பின்சென்றான்" என்று கூறினார் (5:28). அழிந்து போகும் பூமிக்குரிய செல்வங்களின் இடத்தில் (6:19-21), இயேசு பரலோகத்தில் உள்ள பொக்கிஷங்களை அவருக்கு அளித்தார். அது அவர் (மத்தேயு) மறுக்க முடிந்திராத மற்றும் மறுக்காத அளிப்பாக இருந்தது. மத்தேயு, அதிகாரம், செல்வாக்கு மற்றும் செல்வம் ஆகியவற்றில் தாம் கொண்டிருந்த நிலைப்பாட்டை விட்டு வந்தார் - மற்றும் வேத வாக்கியங்கள் உரைக்கிறபடி, அவர் ஒருக்காலும் பின்னோக்கிப் பார்க்கவில்லை. இயேசுவின் மீது மத்தேயு வைத்திருந்த மாபெரும் விசுவாசம் பற்றி, லியோன் மோரீஸ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> மீனவர்கள் மீன்பிடி தொழிலுக்குத் திரும்பச் சென்றிருக்கலாம், ஆனால் வரிவசூலிப்பவர் சுங்க வரி விதிக்கும் தொழிலுக்குத் திரும்பி இருக்க இயலாதிருந்தது. எவ்வகையிலும், அவர் செய்துவந்த ஆதாயம் மிகுந்த பணி விரைவிலேயே வேறொருவரைக் கொண்டு நிரப்பப் பட்டிருக்கும். அவர் வேறு வேலையைப் பெற முயற்சி செய்தார் என்றால், முன்னாள் வரிவசூலிப்பவரை வேலைக்கு அமர்த்த யார்தான் விரும்புவார்?[8]

## பாவிகளுக்கு இயேசுவின் அழைப்பு (9:10-13)

***[10]பின்பு அவர் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள். [11]பரிசேயர் அதைக் கண்டு, அவருடைய சீஷர்களை நோக்கி: உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்ன வென்று கேட்டார்கள். [12]இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. [13]பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.***

**வசனம் 10.** மத்தேயு சொந்த வீட்டில் இயேசுவைக் கனப்படுத்த இந்த விருந்து நடைபெற்றது என்ற உண்மையை, மத்தேயு ஒருவேளை தன்னடக்கத்தினால் பதிவு செய்யாமல் இருந்திருக்கலாம் (மாற்கு 2:15; லூக்கா 5:29). அவர் தம்மைப் போன்றே, சமூகரீதியாகவும் மார்க்கரீதியாகவும் புறக்கணிக்கப் பட்டிருந்து இருந்த, தமது நண்பர்கள் மற்றும் தொழில் கூட்டாளிகள் யாவரையும் இந்த விருந்திற்கு அழைத்திருந்தார். **அநேக ஆயக்காரருடன்** கூடுதலாக, **பாவிகள்** (*hamartōloi*). என்று மாத்திரம் குறிப்பிடப்பட்ட மற்றவர்களும் அங்கிருந்தனர். இந்தச் சொற்றொடர், தசமபாகம் மற்றும் சடங்காச்சாரத் தூய்மை போன்ற, பரிசேயர்களின் பாரம்பரியங்களைக் கண்மூடித்தனமாகப்

பின்பற்றாத யூதர்களை உள்ளடக்குகிறதா?[9] இப்படிப்பட்ட மக்கள், "நாட்டின் மக்கள்" ('*am ha'arets*), அதாவதுபொதுமக்கள் என்று ரபீத்துவ இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.[10] இருப்பினும் கிரேய்க் S. கீனர் அவர்கள், "இங்கு 'பாவிகள்' என்பது இப்படிப்பட்ட குறுகிய அர்த்தத்தைக் கொண்டுள்ளது என்று யூகிக்கக் காரணம் எதுவும் இல்லை; இந்தச் சொற்றொடர், நியாயப்பிரமாணத்தை வெளிப்படையாக மீறுபவர்களைக் குறிப்பிட அதிக வாய்ப்பு உள்ளது" என்று விவாதித்தார்.[11]

புகழ்ச்சியற்ற இப்படிப்பட்ட மக்களுடன் உண்ணுதல் என்ற இயேசுவின் செயல், மார்க்கரீதியான நிர்வாகத்திற்கு அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது என்று நிரூபிக்கப்பட்டது (லூக்கா 15:1, 2). உணவு உண்பதற்கு இன்னொரு நபரை அழைத்தல் என்பது அந்தக் காலகட்டத்தில், நட்புறவையும் ஐக்கியத்தையும் தெரியப்படுத்தும் ஒரு சடங்காகி இருந்தது.[12] இயேசு இவ்வகையான விருந்துகளில் கலந்துகொண்டார், என்பதால் அவர் "போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்" என்று அழைக்கப்பட்டிருந்தார் (11:19). இயேசு, பாவிகளுடன் நேரத்தைச் செலவிட்டாலும், அவர் பாவம் நிறைந்த மக்களுடன் உணவு உண்டார் என்பது, அவர்களின் பாவம் நிறைந்த நடவடிக்கைகளில் அவர் பங்கேற்றார் என்று சம்பந்தப்படுத்தப்படக் கூடாது. பாவிகளுக்கு மத்தியில் இருந்த அவரது பிரசன்னம், அவர்களுக்கு அவருடைய சத்தியத்தைப் போதிக்கும் வாய்ப்பை அளித்தது.

**வசனம் 11. பரிசேயர், சீஷர்களை நோக்கி: உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம்பண்ணுகிறதென்ன?** என்று கூர்மையான குற்றச்சாட்டுடன் இயேசுவின் பரிவிரக்கத்திற்குப் பதில் செயல் செய்தனர். நீதிமானான ஒரு மனிதர் அநீதியான மக்களுடன் ஐக்கியம் கொண்டிருக்கும் இச்செயலை வெட்கக்கேடானதாக அவர்கள் கருதினர் (சங்கீதம் 1:1; 119:63; நீதிமொழிகள் 13:20; 14:7; காண்க 1 கொரிந்தியர் 15:33). இயேசு தாமே அவர்கள் ஏளனத்தின் முதன்மைக் குறியாக இருந்தார் என்றாலும், அவர்கள் தங்கள் விமர்சனத்தை, இப்படிப்பட்ட போதகரைத் தேர்ந்து கொண்ட சீஷர்களை நோக்கித் திருப்பினர். அவரை நேரடியாக எதிர்க்கப் பயந்த அவர்கள், அவர்மீது தங்கள் வெறுப்பைக் காண்பிக்க இந்தச் சுற்றுவழியைத் தேர்ந்து கொண்டனர்.

**வசனம் 12.** இயேசுவின் சீஷர்களிடம் அவர்கள் கூறிய விமர்சனத்தை **இயேசு கேட்டு,** அதற்குப் பதில் அளித்தார். **அவர், பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை என்று கூறினார்.** தேவையாயிருந்த ஆவிக்குரிய பாடத்தைப் போதிப்பதற்கு இயேசு, தினசரி வாழ்வில் இருந்து ஒரு பொதுவான விவரிப்பைப் பயன்படுத்தினார். ஆரோக்கியமாக உள்ள மக்கள் மருத்துவர்களை நாடுவதில்லை; வியாதிப்பட்டவர்களே அவ்வாறு மருத்துவர்களை நாடுகின்றனர். இயேசு, ஆத்துமாவுக்கு மாபெரும் வைத்தியராக இருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில் பரிசேய விமர்சகர்கள் செய்தது போன்று தங்களைத் தாங்களே முழுமையான ஆரோக்கியம் உள்ளவர்களாகக் கருதுபவர்கள், தங்கள் ஆவிக்குரிய வியாதியில் இருந்து தங்களைக் குணமாக்க ஒரு மருத்துவரை நாட மாட்டார்கள். அவர்கள் தங்கள் சொந்தப் பாவம்நிறைந்த தன்மையில் பார்வை

*அற்றவர்களாக இருந்தனர் (15:14; 23:16, 17, 19, 24, 26; யோவான் 9:40, 41; 12:40; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 3:17, 18).*

*இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட இக்கூற்றிற்கு ஒப்பான கூற்றுகளை கிரேக்க மற்றும் ரோம எழுத்தாளர்கள் பதிவு செய்துள்ளனர். இந்தக் கூற்றுக்கள் சில வேளைகளில், சமூகத்தின் வண்டல்களைச் சென்றடைந்தமைக்காக விமர்சனம் செய்யப்பட்ட தத்துவஞானிகளுக்கு உரியதாக இருக்கின்றன. இந்த மனிதர்கள், "வைத்தியர்கள் வியாதிப்பட்டவர்களைக் கவனிக்கின்றனர்" என்றும் "வைத்தியர்கள் தங்களுக்குக் காய்ச்சல் வராமல் நோயாளிகளைக் கவனிக்கின்றனர்" என்றும் கூறுவதன் மூலம் தங்களைத் தற்காத்துக் கொண்டனர்.[13] அவர்கள், "வியாதிப்பட்டவர்கள் எண்ணற்று இருக்கும் இடத்திற்குச் சென்று தமது சேவைகளை அளிக்கும் நல்ல மருத்துவரைப் போன்று, ... ஞானமுள்ள மனிதரும், மதியீனமானவர்களின் தவறுகளைக் குறித்து அவர்களுக்குக் குற்றம் உணர்த்தி அவர்களைக் கடிந்து கொள்ளும்படிக்கு அவர்கள் மத்தியில் தங்கவேண்டும்" என்று கூறுவார்கள்.[14] ஆத்துமாவின் (பொல்லாங்கு) என்ற வியாதியானது (தத்துவஞானிகளான) மனிதர்களின் அறிவுறுத்துதலினால் குணமாக்கப்பட முடியும் என்று கூறப்பட்டது.[15] மேலும் கண்டித்தலின் பலமான வார்த்தைகள், வைத்தியர்களின் வலிநிறைந்த சிகிச்சைக்கு ஒப்பிடப்பட்டன.[16] மற்றவர்களைக் கடிந்துகொள்ளும் தத்துவஞானி, வியாதிப்பட்ட நபர்மீது கோபம் கொள்ளாமல் வியாதிக்குச் சிகிச்சை அளித்த வைத்தியர் போன்று இருந்தார்.[17]*

***வசனம் 13. போய்க் கற்றுக்கொள்ளுங்கள்** என்ற சொல்விளக்கம், பழைய ஏற்பாட்டு வேத வசனங்களில் கல்வியாளர்களாகத் தங்களைக் கருதிக்கொண்டவர்களுக்குக் கண்டனத்தின் வடிவமாக இருந்தது (காண்க 12:5). இந்தச் சொல்விளக்கம் "மேலான அறிவை எதிர்கொண்டபோது யூத போதகர்களால் பயன்படுத்தப்பட்ட நன்கு அறியப்பட்ட ரபீத்துவச் சூத்திரமாக" இருந்தது.[18] ரபீத்துவ போதனைகளில் ஒரு சொற்றொடர் என்ற வகையில், "போய்க் கற்றுக்கொள்ளுங்கள்" என்ற இந்தச் சொற்றொடர், இயேசுவின் பதிலில் இரண்டாவது பாகத்தை அறிமுகப்படுத்துகிறது. இது, "நியாயப்பிரமாணத்தைக் கற்றுக் தேர்ந்தவர்கள் என்று யூகிக்கப்பட்டவர்களாக இருந்த கேள்விகேட்டவர்களின் பகுதியில் அறிவுக்குறைவை மறைமுகமாக உணர்த்திற்று."[19]*

*இயேசு தமது கருத்தை இன்னும் பலமானதாக ஆக்குவதற்கு, ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில் இருந்து மேற்கோள் காண்பித்தார். இந்த மனிதர்கள் அறிந்திருக்க வேண்டிய ஆனால் அறியவில்லை என்று தெளிவாகத் தெரிந்த வசனப்பகுதி ஒன்றைத் தேர்ந்துகொண்டார்: **பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்** (ஓசியா 6:6). கிறிஸ்துவினால் மேற்கோள் காண்பிக்கப்பட்ட இவ்வசனப்பகுதியில் உள்ள வித்தியாசமான வார்த்தை அமைவு குறித்து. ஜேக் P. லூயிஸ் அவர்கள் பின்வருமாறு விளக்கினார்:*

> *இந்தக் குறிப்புரையானது, வடிவத்தில் செப்துவஜிந்த் வேதாகமத்தைப் பார்க்கிலும் எபிரெய மொழியில் உள்ள ஓசியாவின் வசனப்பகுதிக்கு அதிகமாக ஒத்துப்போகிறது; இருப்பினும், எபிரெய மொழியின் hesed (இரக்கம்) என்பது செப்துவஜிந்த் வேதாகமத்தில் eleos என்று*

ஆகிறது மற்றும் இது, இயேசு ஊழியம் செய்த அடிப்படைக் கொள்கையான, இரக்கப்படுதல் அல்லது பரிவிரக்கப்படுதல் என்று புரிந்துகொள்ளப்படுகிறது.[20]

பரிசேயர்கள் தங்கள் சடங்காச்சாரங்களில் திருப்தி கொண்டிருந்தனர், ஆனால் அவர்களின் இருதயங்கள் தேவனுடன் நேராக இருக்கவில்லை. தோட்டத்துக் கீரை போன்ற சிறு பொருள்களிலும் கூட அவர்கள் தசமபாகம் கொடுத்திருந்தபோதிலும், அவர்கள் "இரக்கம்" உட்பட "நியாயப்பிரமாணத்தின் மிகவும் கனம் பொருந்திய அளிப்புகளை" புறக்கணித்திருந்தனர் (23:23). இங்கு "பலி" (*thusia*) என்பது உண்மையான மிருகபலிகளுடன் கூடுதலாகக் கடைப்பிடிக்கப்பட்ட சடங்காச்சாரங்கள் பலவற்றைக் குறிப்பிடக்கூடுவதாக இருந்தது. ஓசியாவோ அல்லது இயேசுவோ, நியாயப்பிரமாணத்தில் பரிந்துரைக்கப்பட்ட பலிகளின் மதிப்பைத் தாழ்த்தவில்லை. இந்த மேற்கோள் "'பலியைக் காட்டிலும் இரக்கத்தை நான் அதிகம் விரும்பித் தேர்ந்துகொள்கிறேன்' என்று அர்த்தப்படுத்தும் எபிரெயத்துவமாக" உள்ளது என்று J. W. மெக்கார்வீ அவர்கள் சுட்டிக்காண்பித்தார்.[21] இயேசு பரிசேயர்களால் எதிர்கொள்ளப்பட்ட இன்னொரு வேளையில் இது அவரால் மீண்டும் பயன்படுத்தப்பட்டது (12:7).

இயேசு, **நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்** என்று கூறி முடித்தார். "அழைக்க" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*kaleō*) கிரேக்க வார்த்தை "திருமண விருந்து பற்றிய உவமையில் (22:1-10) உள்ளது போன்று அழைப்பு விடுத்தல் என்றும் அர்த்தப்படக்கூடும்."[22] இந்த அழைப்பு பாவிகள் மனந்திரும்புவதற்கானதாக இருந்தது (லூக்கா 5:32). "இழந்துபோனதைத் தேடுதலும் இரட்சித்தலும்" என்பதே இந்த உலகத்தில் இயேசுவின் ஊழியமாக இருந்தது (லூக்கா 19:10). பாவிகள் யாவருக்கும் அவர் இரக்கம் நிறைந்த அழைப்பை விடுத்தார்; ஆனால் சுயநீதிகொண்ட பரிசேயர்கள் தங்களைப் பாவிகளாகக் காணவில்லை என்பதால், அவர்கள் அந்த அழைப்பிற்குச் செவிகொடுக்காது இருந்தனர். "நீதி" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதன் மூலம் இயேசு, தாம் அளித்த இரட்சிப்பு தேவைப்படாத அளவுக்குச் சிலர் மிகவும் நல்லவர்களாக இருந்தனர் என்று கூறவும் இல்லை, அல்லது பரிசேயர்கள் நீதிமான்களாக இருந்தனர் என்று அவர் அர்த்தப்படுத்தவும் இல்லை. அவர்கள் தங்கள் சொந்தக் கண்களுக்கு நீதிமான்களாக இருந்தனர் என்று மாத்திரமே அவர் அர்த்தப்படுத்தினார் (காண்க லூக்கா 18:9-14).

## சீஷத்துவமும் உபவாசித்தலும் (9:14-17)

**14 அப்பொழுது, யோவானுடைய சீஷர் அவரிடத்தில் வந்து: நாங்களும் பரிசேயரும் அநேகந்தரம் உபவாசிக்கிறோமே; உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்டார்கள்.**

**15 அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களே? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்.**

[16]**ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்கமாட்டான்; இணைத்தால், அதினோடே இணைத்த துண்டு வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாகும்.**

[17]**புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கிறதும் இல்லை; வார்த்துவைத்தால், துருத்திகள் கிழிந்துபோம், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்; புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைப்பார்கள், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும் என்றார்.**

***வசனம் 14. யோவான் ஸ்நானனின் சீஷர்கள் சிலர்,*** *தாங்கள் உபவாசம் இருப்பதாகவும் ஆனால் இயேசுவின்* ***சீஷர்கள்*** *ஏன்* ***உபவாசம் இருப்பதில்லை*** *என்றும் அவரிடத்தில் கேட்டனர். அவர்களின் கேள்வி சூழ்நிலைகளினால் இயல்பாகவே விளைந்தது: யோவானின் சீஷர்கள் உபவாசம் இருந்து கொண்டிருக்க, இயேசுவும் அவரது சீஷர்களும்* ***விருந்து கொண்டாடிக் கொண்டிருந்தனர்.*** *ராபர்ட் H. மவுன்ஸ் அவர்கள், "முந்திய பத்தியில் தள்ளிவைக்கப் பட்டவர்களுடன் உணவு உண்ணலாமா? என்பது கேள்வியாக இருந்தது, இப்போது அவர் உண்ணலாமா? என்பதே கேள்வியாக இருந்தது" என்று சுட்டிக்காண்பித்தார்.[23] யோவானின் சீஷர்கள், சீஷத்துவத்துடன் தொடர்புடைய வகையில், உபவாசம் கொண்டிருந்த பணிப்பொறுப்பு என்ன என்று அறிந்து கொள்ள விரும்பினர். இயேசுவும் அவரது சீஷர்களும் இந்த வேளையில் உபவாசம் இருக்கவில்லை என்பது, அவர்களின் இயக்கத்தில் முதன்மைக் குறைபாடாக இந்த வேளையில் கண்ணோக்கப்பட்டது.*

*இயேசுவுக்கு நேர்மாறாக யோவான் ஸ்நானன், துறவு வாழ்வு வாழ்ந்து வந்தார் (3:1-4). இவ்விரு மனிதர்களுக்கும் இடையிலான இந்த வித்தியாசம், அவர்களை மிகக்கூர்மையாக விமர்சனம் செய்தவர்களால் உற்றுக்கவனிக்கப்பட்டது. ஒருபுறம் "யோவான் புசியாதவராகவும் குடியாதவராகவும்" வந்தார், அவர் "பிசாசு பிடித்தவர்" என்று அவர்கள் கூறினர். மறுபுறம் இயேசு, "புசிப்பவராகவும் குடிப்பவராகவும்" வந்தார், அவர்கள் அவரை "போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமானவர்" என்று குற்றம் சாட்டினர் (11:18, 19).*

*இந்த வசனப்பகுதியில் யோவான் ஸ்நானனுடைய சீஷர்கள் இருந்தனர் என்பது, அவர்கள் உடனடியாகத் தங்கள் பற்றுறுதியை இயேசுவினிடம் மாற்றிக்கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. இவ்விரு ஊழியங்களும் ஒன்றின்மீது இன்னொன்று கவிர்ந்திருந்தன, மற்றும் இயேசுவின் ஊழியம் வளர்ந்து கொண்டிருந்தது. கிறிஸ்துவுக்கு முன்னோடினவர் என்ற வகையில் யோவான் தமது சீஷர்களுக்கு இயேசுவைச் சுட்டிக் காண்பித்தார் (யோவான் 1:29-42). இருப்பினும் யோவான் தொடர்ந்து பிரசங்கித்து ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். விரைவிலேயே இயேசுவின் ஊழியம் யோவானின் ஊழியத்தை மிஞ்சிப்போக இருந்தது: "யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறார்" (யோவான் 4:1). பிற்பாடு யோவான், ஏரோது அந்திப்பாவினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பின்பு தலை வெட்டப்பட்டார் (4:12; 11:1-15; 14:1-12).*

*யோவான் தமது* ***ஊழியத்தின் காலத்தில்,*** *தம்மைப் பின்பற்றியவர்களுக்கு உபவாசித்து ஜெபிக்கும்படி அறிவுறுத்தியிருந்தார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை (லூக்கா 5:33; 11:1). யோவானின் சீஷர்களும் பரிசேயரும் உபவாசிக்கும் நடைமுறையில் கருத்து ஒருமித்து இருந்தனர் என்பதாகக் காணப்படுகிறது. அவர்கள் உபவாசித்ததாகக் கூறியபோது, அவர்கள் அடிக்கடி உபவாசித்ததாக மறைமுகமாக உணர்த்தினர். முன்பே குறிப்பிட்டபடி, பாவநிவிர்த்தி நாளன்று கடைப்பிடிக்கப்பட்டதுதான் கட்டளையிடப்பட்ட ஒரே உபவாசமாக இருந்தது (யோம் கிப்புர்; லேவியராகமம் 16:29-31), ஆனால் பரிசேயர்கள் வாரத்தில் இரண்டு நாட்கள் உபவாசிக்கும் நடைமுறையைப் பராமரித்தனர்: திங்கள் மற்றும் வியாழக்கிழமைகள். அவர்களின் பாரம்பரியங்கள் வளர்ந்தபோது மற்ற உபவாசங்கள் ரபீக்களால் கூட்டப்பட்டன (6:16ன் மீதான விளக்கங்களைக் காணவும்).*

*யோவானுடைய சீஷர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கும் வகையில், தொடர்ந்து வந்த - மணவாளன் (9:15), ஆடை (9:16) மற்றும் திராட்சரசத் துருத்திகள் (9:17) பற்றிய - மூன்று விவரிப்புகள் முன்வைக்கப்பட்டன. இயேசு தமது சீஷர்கள் மத்தியில் இந்த பூமியில் பிரசன்னமாக இருக்கையில், உபவாசித்தல் என்பது சீர்பொருத்தமற்றதாக இருந்தது என்று அவர் சுட்டிக்காண்பித்தார்.*

***வசனம் 15.*** *முதலாவது விவரிப்பில்* ***இயேசு, மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா?*** *என்று கேட்டார். முன்னதாக யோவான் ஸ்நானன், தமது சீஷர்களுக்குத் தம்மை "மணவாளனுடைய தோழன்" என்றும், இயேசுவை மணவாளன் என்றும் அடையாளம் காட்டியிருந்தார் (யோவான் 3:29; காண்க 22:2, 3; 25:1; எபேசியர் 5:22-33; வெளிப்படுத்தின விசேஷம் 19:7; 21:9). "மணவாளனுடைய தோழர்கள்" மணவாளனுக்கு மிகவும் நெருக்கமாக நின்றுகொண்டு திருமணச் சடங்கில் முக்கியமான பணிப்பொறுப்பை நிறைவேற்றினர். இந்தச் சொற்றொடர் சிலவேளைகளில் மிகவும் பொதுப்படையாக "திருமண விருந்தினர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இயேசுவின் கேள்வி எதிர்மறையான பதில் ஒன்றை முன்யூகிக்கிறது. துக்கத்தினால் பண்புப் படுத்தப்பட்ட உபவாசித்தல் என்பது சந்தோஷமான திருமண வைபவத்திற்குச் சீர்பொருத்தம் அற்றதாக உள்ளது.*[24]

*இயேசுவின் சீஷர்கள் யோவானுடைய சீஷர்களைப் போன்று அடிக்கடி* ***உபவாசிக்காமல்*** *இருக்கையில், அவர்கள் உபவாசிக்கும் காலம் வரும் என்று இயேசு சுட்டிக்காண்பித்தார். லூயிஸ் அவர்கள், "இயேசு தமது சீஷர்களின் மத்தியில் இருக்கையில், அவர்கள் சந்தோஷத்தை விரும்பிக்கேட்கும் மாறுபட்ட சூழ்நிலையில் இருந்தனர்; ஆனால் அவர் இவ்வுலகை விட்டுச் சென்றபின்பு, உபவாசித்தல் என்பது ஏற்புடையதாகும். யோவான் சிறைச்சாலையில் இருந்தபோது [4:12] அல்லது மரித்தபோது [14:10], அவரது சீஷர்கள் மாறுபட்ட சூழ்நிலையில் இருந்தனர்" என்று விளக்கப்படுத்தினார்.*[25]

*துக்கப்படுதல் என்பது உபவாசித்தலுக்கான முதன்மைச் சந்தர்ப்பப்பொருளாகப் பழைய ஏற்பாட்டில் இருப்பதால், இயேசு தமது மரணத்திற்குப் பின்பு - தாம்* ***அவர்களை*** *[தமது சீஷர்களை]* ***விட்டு எடுபடும்போது*** *உபவாசித்தல் நடைபெறும் என்று குறிப்பிட்டிருக்கவே*

அதிகம் வாய்ப்புள்ளது. இந்த மொழிநடையானது ஏசாயா 53:8ல் காணப்படும் பாடுகள் பற்றிய பின்வரும் முன்னுரைத்தலைப் போன்றதாக உள்ளது: "இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் *எடுக்கப்பட்டார்*" (வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). இது, சிலுவையில் அறையப்படுதல் பற்றி மத்தேயு சுவிசேஷத்தில் காணப்படும் முதல் மறைமுகக் குறிப்பாக உள்ளது (காண்க 16:21; 17:22, 23; 20:18, 19). இயேசுவின் கூற்று, கிறிஸ்தவர்கள் பொதுவாக உபவாசித்தலுக்குக் குறிப்புரையாக விசாலமான நடைமுறையைக் கொண்டிருக்கையில், அவர் தமது மரணத்தின்போது தமது சீஷர்கள் கடைப்பிடிக்க விருந்த விசேஷித்த உபவாசத்தைக் குறிப்பிட்டார் என்று காணப்படுகிறது. இயேசு அவர்கள் மத்தியில் இருந்த வரையிலும் அது வைபவத்தின் வேளையாக இருந்தது; ஆனால் அவரது மரணத்தின் போது, குறைந்த பட்சம் அவர் உயிர்த்தெழும் வரையிலாவது, வருத்தம் அவர்களைச் சூழ்ந்துகொள்ளும் (யோவான் 16:16-22). உபவாசித்தல் என்பது அவர்களின் புலம்பலின் இயல்பான விளைவாக இருக்கும். இயேசு ஏற்படுத்தின நேர்மாறான கருத்து, "இயேசுவுடனான ஐக்கியம், திருமணம் போன்ற சந்தோஷமாகவும் இயேசுவின் மரணம், சவ அடக்கம் போன்ற துக்கமாகவும்" உண்மையில் இருந்தது.[26]

**வசனங்கள் 16, 17.** மற்ற இரண்டு விவரிப்புகள், இயேசு தமது சீஷர்கள் மத்தியில் இருக்கையில், உபவாசித்தல் என்பது பொருத்தமற்றதாக உள்ளது என்று தொடர்ந்து வலியுறுத்துகின்றன. திருமண விருந்தில் துக்கப்படுதல் என்பது ஏற்பில்லாததாக இருப்பது போன்றே, **பழைய வஸ்திரத்தைப்** பழுதுநீக்க, அத்துடன் **கோடித்துண்டை** இணைத்தல் பயன்படாது. இவை இரண்டும் பொருத்தம் அற்றவையாக உள்ளன. "கோடித்துண்டு" என்பது துணியைத் துப்புரவு செய்பவரால் செயல்முறைக்கு உட்படுத்தப் படாதிருந்த பொருளாகும். "வஸ்திரம்" (*himation*) என்ற சொற்றொடர் பொதுவாக உடையை அல்லது மிகவும் குறிப்பாக ஒரு வெளியாடையைக் குறிக்கக் கூடும், இது கிழிந்துபோக அதிக ஏதுவானதாக உள்ளது (5:40ன் மீதான விளக்கங்களைக் காணவும்). புதிய துணியின் **துண்டு** பழைய உடையில் வைத்துத் தைக்கப்படும் என்றால், அது துவைக்கப்படும்போது, அந்தப் புதிய துணித்துண்டு சுருங்கிப்போய், பழைய உடையை இழுத்துக் **கிழிக்கும்**, மற்றும் அந்த உடைய மிகவும் **மோசமானதாக** ஆக்கிவிடும்.

சுருக்கம் அடையாத துணியானது பழைய உடையுடன் வைத்துத் தைக்கப்படாதது போன்றே, **புது திராட்சரசமும் பழந்துருத்திகளுக்குப்** பொருத்தமற்றதாக இருந்தது. தண்ணீர், பால் மற்றும் திராட்சரசம் போன்ற நீர்மங்களை எடுத்துச் செல்வதற்கான கலன்களைத் தயாரிப்பதில், மிருகங்களின் தோல்கள் பயன்படுத்தப்பட்டன. வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்கள் பின்வரும் விவரிப்பைத் தந்தார்:

> திராட்சரசத் துருத்திகள் வழக்கமாக, வெள்ளாடு அல்லது செம்மறி ஆட்டின் தோலினால் செய்யப்பட்டன. அந்தத் தோல், மிருகத்தின் உடலில் இருந்து நீக்கப்பட்டவுடன் பதப்படுத்தப்பட்டு, பின்பு அந்தத் தோலில் உள்ள முடியானது வெட்டப்பட்டு, அந்தத் தோலின் உள்புறம் வெளிப்புறமாகத் திருப்பப்பட்டது. அதன் கழுத்துப்பகுதி "புட்டியின்"

*வாயாக ஆனது. பாதங்கள் மற்றும் வால் ஆகியவற்றில் இருந்த மற்ற திறப்புகள் கயிற்றினால் கட்டி மூடப்பட்டன.*[27]

*இப்படிப்பட்ட ஒரு துருத்தியில் திராட்சரசம் சேமித்து வைக்கப்படும்போது, நொதித்தலானது அந்தத் துருத்தியை இழுத்து அகலப்படுத்தும். இருந்தபோதிலும், சற்றுகாலத்தில் அந்தத் தோல் உலர்ந்து உடையக்கூடியது ஆகிவிடும். பழைய துருத்திகளில் புதுத்திராட்சரசம் ஊற்றப்பட்டால், நொதித்தலானது அதைப் பழுதாக்கும், இதன் விளைவாக, புதுத்திராட்சரசம் இழந்துபோகப்படும். **புது திராட்சரசம் புது துருத்திகளுக்கு** மட்டுமே பொருத்தமானதாக உள்ளது.*

*பொருத்தமானது என்பதின் கொள்கைக்கு அப்பால் மிக அழமான தனிச்சிறப்புக் கருத்தொன்று இந்த இரண்டு விவரிப்புகளிலும் இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. "உவமைகள்" என்ற வடிவத்தில் இருக்கும் (லூக்கா 5:36-38) இந்த இரண்டு உதாரணங்களுமே, பழையதைப் புதியதுடன் ஒப்பிடுகின்றன: பழைய வஸ்திரம்/புதிய ஒட்டுத்துணி மற்றும் பழைய திராட்சரசத் துருத்தி/புதிய திராட்சரசம். ஒருவேளை இயேசு - மனிதப்பாரம்பரியத்தினால் மோசமாக்கப்பட்ட - யூதத்துவத்தின் வடிவங்கள் கிறிஸ்தவத்தின் புதிய போதனைகளினால் இடமாற்றப்பட்டன என்ற கருத்தையும் கொண்டுவந்து இருக்கலாம். இந்தப் பாரம்பரியங்களின் பாகமாக இருந்த உபவாச முறைமையானது, பழைய வஸ்திரமாக இருந்தது, அதில் புதிய ஒட்டு ஒன்றைப் போடுதல் பயனற்றதாக இருந்தது மற்றும் பழைய திராட்சரசத் துருத்தியைப் புதிய திராட்சரசம் கிழித்துப் போடுவதாக இருந்தது. பழைய முறைமையைப் பழுதுநீக்குவதற்காக அல்ல ஆனால் முற்றிலும் புதிதான ஒரு முறைமையை அறிமுகப்படுத்தவே இயேசு வந்தார். அவர் தாம் தெரிவிக்க வந்த புதிய சத்தியங்களை, அவர்களின் பழுதான விதிகளுடன் ஒட்டுப் போட இயலாதிருந்தார் (காண்க 5:17). விசுவாசித்தல், சிந்தித்தல் மற்றும் வாழுதல் ஆகியவற்றின் புதிய வழியொன்றை அவர் கொண்டுவந்தார். அவர் கொண்டுவந்த புதிய முறைமையானது உபவாசித்தலுக்கு மனிதரால் உருமாற்றப்பட்ட பழைய முறைமையுடன் பொருந்தவில்லை.*

*உபவாசம் என்பது பழைய முறைமையின் முக்கியமான பாகமாக இருந்த போதிலும் (6:16-18), உபவாசங்களை அடிக்கடி கடைப்பிடித்தல் என்பது முற்றிலும் மனிதக் கண்டுபிடிப்பாகவே இருந்தது. இயேசு உபவாசத்தைக் கண்டனம் செய்யவில்லை, ஆனால் உண்மையான அர்த்தமும் நோக்கமும் மறக்கப்பட்டு பாரம்பரியத்தால் கட்டுப்படுத்தப்பட்ட உபவாசம் என்ற அவர்களின் பழைய துருத்தியையே அவர் கண்டனம் செய்தார். அவர் சீஷர்கள், உபவாசித்தலில் பரிசேயர்களின் வழக்கத்தைப் பின்பற்றக் கூடாது என்று எச்சரித்தார், மற்றும் உபவாசத்தைச் சந்தர்ப்பமானது வேண்டிக் கேட்கும்போது, அந்த உபவாசத்தின் மதிப்பை அவர்களின் மனதில் பதியச் செய்தார் (காண்க நடபடிகள் 13:2, 3; 14:23; 2 கொரிந்தியர் 6:5; 11:27).*

## *இயேசுவின் அழைப்புப் பட்டியல் (9:9-13)*

*அவ்வப்போது நாம் அழைப்புப் பட்டியலைத் தயார்செய்கிறோம். இவைகள், ஒரு குழந்தையின் பிறந்தநாள், ஒரு இளம் தம்பதியரின் திருமணம் அல்லது முதிர்வயதான தம்பதிகளின் ஆண்டுக் கொண்டாட்டம் ஆகிவற்றுடன் தொடர்பு கொண்டதாக இருக்கலாம். இவ்வாறே இயேசு, பரலோக விருந்திற்கு, பாவிகளை உள்ளடக்கிய ஒரு அழைப்பு பட்டியலைத் தயார்செய்தார் (காண்க 22:1-10). அவர், "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்று கூறினார் (9:13). தங்களை "நீதிமான்கள்" என்று கண்ணோக்கியவர்கள் தங்கள் பாவங்களைக் காண முடியாதவர்களாக இருந்தனர். இதன் விளைவாக அவர்கள் இயேசுவின் அழைப்பில் இருந்து தங்களை விலக்கிக் கொண்டனர். இதற்கு நேர்மாறாக, தங்கள் பாவம் நிறைந்த நிலையைப் பற்றி அறிபவர்கள் தங்களுக்குக் கிருபை தேவை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.*

டேவிட் ஸ்டீவர்ட்

## *இன்றைய நாட்களில் உபவாசம் (9:14-17)*

*இயேசுவின் சீஷர்கள் முறையாக உபவாசிப்பதில்லை என்ற உண்மை, யோவானுடைய சீஷர்களைத் திகைப்படையச் செய்தது. இயேசுவைப் பின்பற்றியவர்களின் மத்தியில் அவர் இருந்ததால், புலம்புதலுடன் இணைவுபெற்ற உபவாசம் என்பது அவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை என்று இயேசு விளக்கப்படுத்தினார். அவர் சிலுவையில் அறையப்படும்போது, உபவாசித்தல் அல்லது புலம்புதலுக்கான வேளை வர இருந்தது. இருப்பினும் இந்தத் துக்கம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் நீக்கிப்போடப்பட்டது. இன்றைய நாட்களில் நாம், தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்ட உயிர்த்தெழுந்த இரட்சகருக்கு ஊழியம் செய்கிறோம்! மற்றும் அவர் நமது இருதயங்களில் வாசம் பண்ணும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்பியிருக்கிறார். நாம் நமது நம்பிக்கைகள் மற்றும் கனவுகள் யாவும் நிறைவேற்றப்படும் நிகழ்வான கிறிஸ்துவின் மறுவருகையை முன்னெதிர் நோக்குகிறோம். முறையான உபவாசம் என்பது புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் அவ்வப்போது உபவாசித்தல் ஏற்புடையதாக உள்ளது. ஊழியக்காரர்களை அனுப்புதல் அல்லது மூப்பர்களை நியமித்தல் போன்ற முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளும் வேளையில், ஆதி சபையார் உபவாசம் இருந்தனர் (நடபடிகள் 13:2, 3; 14:23). இன்றைய நாட்களில் சபையானது முக்கியமான முடிவுகளை அல்லது கடினமான சிரமங்களை எதிர்கொள்ளும்போது, உபவாசித்தலும் ஜெபித்தலும் பயன்மிக்கதாக இருக்க முடியும்.*

டேவிட் ஸ்டீவர்ட்

## பொருத்தமான சுவிசேஷம் (9:14-17)

புத்தம் புதிய வழிகளில் சுவிசேஷத்தை முன்வைத்தலோ அல்லது மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய மொழியில் அதைத் தழுவி அமைத்தலோ தவறில்லை. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்திற்கு, வேதாகம மொழிநடையையும் விவரிப்புகளையும் தொடர்புபடுத்துவதில், நாம் செய்தியின் நோக்கமானது பிறழ்வுபட்டுப் போகும்படியாக அதை மாற்றிவிடக்கூடாது (யோவான் 12:48; 1 கொரிந்தியர் 15:1-4; கலாத்தியர் 1:6-9; யூதா 3). மனிதரின் பாரம்பரியத்தினாலோ (15:1-9; கொலோசெயர் 2:8) அல்லது மற்ற மார்க்க முறைமைகளுடன் அனுசரித்துப்போவதினாலோ (கொலோசெயர் 2:20-22; 2 யோவான் 9-11) சுவிசேஷத்தை நீர்த்துப்போகச் செய்துவிடக்கூடாது.

உபவாசத்தின் உண்மையான அர்த்தத்தையும் நோக்கத்தையும் மறந்து, பாரம்பரியங்களினால் கட்டுப்படுத்துதலை இயேசு கண்டனம் செய்தார். 9:15-17ல் தரப்பட்டுள்ள மூன்று விவரிப்புகள், பரியேசர்களாலும் யோவானின் சீஷர்களாலும் கடைப்பிடிக்கப்பட்ட, முறையான உபவாசம் என்ற வழக்கத்தை இயேசுவின் சீஷர்கள் பின்பற்றாது இருந்ததை நியாயப்படுத்தின. இது "ஏற்புடைய சந்தர்ப்பங்கள் வேண்டிக்கேட்கும்போது மாத்திரமே உபவாசம் மதிப்புள்ளதாக இருந்தது என்ற பாடத்தை மனதில் பதியவைப்பதற்கானதாக இருந்தது" என்று போல்ஸ் அவர்கள் எழுதினார்.[28]

சிலர், இந்த விவரிப்புகள் சுவிசேஷ மாற்றத்தைக் குறிக்கின்றன என்று போதிக்கும்போது இதைத் தவறாகக் குறிப்பிடுகின்றனர். உண்மையில் இவ்வசனப்பகுதி, பரிசேயர்களின் உபவாசிக்கும் நடைமுறையை ஒரு உதாரணமாகப் பயன்படுத்தி, இதற்கு நேர்மாறானதையே போதிக்கிறது. வேதவசனங்கள் விளக்கப்படுத்தப்படும் முறையில் மாற்றம் வேண்டும் என்று ஆர்ப்பரிப்பவர்கள், தாங்களே மறுத்தாலும், இதையே செய்பவர்களாக உள்ளனர்.

---

குறிப்புகள்

[1]William Barclay, *The Master's Men* (Nashville: Abingdon Press, 1959), 58. [2]Thomas E. Schmidt, "Taxes," in *Dictionary of Jesus and the Gospels,* ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 806. [3]Mishnah *Tohoroth* 7.6; *Hagigah* 3.6. [4]Mishnah *Baba Kamma* 10.1. [5]Talmud *Sanhedrin* 25b. [6]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 166-67. [7]காண்க Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 219. கலிலேயா மற்றும் பெரேயா ஆகிய பகுதிகளில் இருந்து வரிவசூல் செய்து பயன்படுத்திக் கொள்ள ஏரோது அந்திப்பாவை ரோம அரசு அனுமதித்தது. (Josephus *Antiquities* 17.11.4.) [8]Ibid., 220. [9]காண்க Michael J. Wilkins, "Sinner," in *Dictionary of Jesus and the Gospels,* ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 757-60. [10]உதாரணத்திற்காக காண்க Mishnah *Demai 2.2, 3,* அவைகளில் "அந்த பகுதியில் உள்ள மக்களை" மற்றும் தயங்குகிறவர்களுக்கு மத்தியில் இருக்கும் வித்தியாசம் கலந்துரையாடப்பட்டது.

[11]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 295. *காண்க மத்தேயு 9:13; 21:32; 26:45; லூக்கா 5:8; 7:37; 13:1, 2; 24:7; யோவான் 9:31. 12யூதர்கள் வழக்கமாகப் புறஜாதியாருடன் உண்ண மாட்டார்கள் என்பதால், உணவில் ஐக்கியம் என்பது, ஆதிசபையில் முதன்மையான பிரச்சனையாக இருந்தது (நடபடிகள் 10:28; 11:2, 3; கலாத்தியர் 2:12, 13). கிறிஸ்துவுக்குள் அவர்களின் ஐக்கியத்தைக் கண்ட சகவிசுவாசிகள், பல்வேறுபட்ட இனப் பின்னணியில் இருந்து வந்தபோதிலும், தங்கள் உணவைப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருந்தது. இருப்பினும் ஒழுக்கவீனமான வாழ்வை வாழும் ஒரு சகோதரருடன் "உண்ணவும்கூடாது" என்று அவர்கள் கண்டனம் செய்யப்பட்டனர் (1 கொரிந்தியர் 5:11).* [13]Diogenes Laertius *Lives of Eminent Philosophers* 2.70; 6.1.6. [14]Dio Chrysostom *Eighth Discourse: On Virtue* 5. [15]Cicero *Tusculan Disputations* 3.3.5; Diodorus Siculus *The Library of History* 12.13.4. [16]Epictetus *Discourses* 2.14.21, 22; Livy 42.40.3. [17]Lucian *Demonax* 7. [18]John Phillips, *Exploring the Gospel of Matthew: An Expository Commentary,* The John Phillips Commentary Series (Grand Rapids, Mich.: Kregel Publications, 1999), 163. [19]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 135. [20]Ibid.

[21]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 83. [22]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 101. [23]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 85. [24]*சந்தோஷகரமான விவாகத்தை பெரிய வேதனை மற்றும் துக்ககாலமாகவும் பேராபத்து மாற்றியதென்று* Apocrypha, *புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது* (1 Maccabees 1:27, 39; 9:39-41). [25]Lewis, 137. [26]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 169. [27]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 428-29. [28]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew*, (Nashville: Gospel Advocate Co., 1936), 210.